மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆலங்குடி

அசல் வழக்கு எண். **237/2018**

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி நவநீத கிருஷ்ணன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. பூங்கொடி, கிரேடு III பெஞ்ச் க்ளார்க் என்பரால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நவநீத கிருஷ்ணன் | தந்தை பெயர் | வீராச்சாமி |
| கிராமம் | : | கோவிலூர் | மாவட்டம் | புதுக்கோட்டை |
| வயது. | : | 52 | தொழில் | சுய தொழில் |

நாள் : 27.03.2026
பி.வா.சா. 1

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். ஏற்கனவே கடந்த 07.11.2024 அன்று எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். தற்போது எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.11 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வழக்கு சொத்துக்களுக்கு பிரதிவாதியின் மூதாதையர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. வழக்கு சொத்துக்களுக்கு வாதியின் தந்தை கோவிந்தன் பெயரில் தவறுதலாக ஏற்பட்ட யூ.டி.ஆர் பதிவேட்டின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. வாதி கடந்த ஜனவரி 2015இல் பிரதிவாதி மற்றும் அவருடைய தந்தை வீராச்சாமி மீது புதுக்கோட்டை நில அபகரிப்பு தடுப்புப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமான விசாரணை அழைப்பாணை அசல் (2 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. கடந்த 28.07.2015ஆம் தேதியில் பிரதிவாதி ஆலங்குடி வட்டாட்சியரிடம் கொடுத்த மனு கையிருப்பு நகல் பி.வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கடந்த 31.07.2015ஆம் தேதியில் பிரதிவாதி ஆலங்குடி சார்பதிவாளரிடம் கொடுத்த தடை மனுவிற்கு ஆலங்குடி சார்பதிவாளர் கொடுத்த பதில் அசல் பி.வா.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வழக்கு சொத்துக்களுக்கு வாதியின் தந்தை கோவிந்தன் பெயரில் தவறுதலாக ஏற்பட்ட யூ.டி.ஆர் பட்டாவை ரத்து செய்ய கோரி புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரிடம் கொடுத்த மேல்முறையீட்டு மனு கையிருப்பு நகல் பி.வா.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வழக்கு சொத்துக்களுக்கு பிரதிவாதியின் தந்தை வீராச்சாமி பெயரில் செலுத்தப்பட்டுள்ள வரி ரசீதுகள் அசல் (3 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. வழக்கு சொத்துக்களுக்கான வில்லங்கச்சான்றிதழ் ( 01.01.1950 முதல் 21.10.2024 வரை) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. புல எண். 53-க்கான புலவரைபடத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. பிரதிவாதி குடும்பத்தினருக்கு சொந்தமான வழக்கு சொத்துக்களுக்கு அருகில் உள்ள இதர சொத்துக்களுக்கான கணினி சிட்டா நகல்(எண்ணிக்கை 3) பி.வா.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. பிரதிவாதி குடும்பத்தினருக்கு சொந்தமான வழக்கு சொத்துகளுக்கு அருகில் உள்ள இதர இடங்களை பிரதிவாதியின் தந்தை வீராச்சாமி விற்பனை செய்ததற்கான வில்லங்கச்சான்று கணினி நகல் பி.வா.சா.ஆ.11ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**ஆலங்குடி(பொறுப்பு).**